# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.259/2023

Deposition of witness – PW–11

| | | | |
|---|---|---|---|
| Name | : குமார் | Caste | : |
| S/o. | : பழனிசாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed on 01.12.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

<u>முதல் விசாரணை :</u>

நான் தாரமங்கலத்தில் குடியிருக்கிறேன். நான் மர வியாபாரம் செய்து வருகிறேன். நான் தாரமங்கலம் பஸ்ஸ்டாண்டில் நிவேதா சைக்கிள் ஸ்டாண்ட் என்ற பெயரில் சைக்கிள் ஸ்டாண்ட் வைத்து நடத்தி வருகிறேன். என்னிடம் சோரகை என்ற ஊரில் குடியிருக்கும் மணி என்பவர் எனது லாரியில் டிரைவராக வேலை செய்தார். ஆஜர் எதிரி செல்லான்(எ) செல்வராஜும் சக்திவேலும் என்னிடம் மரம் அறுக்கும் வேலை செய்து வந்தார்கள். கடந்த 06.01.2023ம் தேதி அன்று

இறந்துபோன மணி என்பவரை ஆஜர் எதிரி செல்வராஜ் மற்றும் சக்திவேல் ஆகியோருடன் வாழப்பாடிக்கு போய் மரம் அறுத்து வர அனுப்பினேன்.

07.01.2023ம் தேதி மரங்களை எடுத்து வந்து களப்பகாரர் சூளையில் கொண்டு போய் இறக்கிவிட்டு போய்விட்டார்கள். மீண்டும் டிரைவர் மணிக்கு போன் செய்து கருக்குப்பட்டிக்கு லாரியை கொண்டுபோய் லோட்மேன்களை ஏற்றி வரும்படி சொன்னேன். டிரைவர் மணி தாரமங்கலம் பஸ்ஸ்டாண்டில் உள்ள எனது சைக்கிள் ஸ்டாண்டிற்கு வந்தார். பிறகு பகல் 12.00 மணிக்கு டிரைவர் மணி, ஆஜர் எதிரி செல்லான்(எ)செல்வராஜ், லட்சுமாயூர் சக்திவேல் ஆகியோர் என்னுடைய ஸ்கூட்டி வண்டியை எடுத்து சென்றார்கள். நான் வண்டியை கொண்டு வந்து விடு என்று ஆஜர் எதிரியிடம் சொன்னேன். அவர் போதையில் உளறினார். அடுத்த நாள் காலை மணியின் கழுத்தை அறுத்து கொலை செய்து 6 துண்டுகளாக வெட்டி குமார் என்பவரின் விவசாய கிணற்றில் போட்டுவிட்டதாகவும் கிணற்றில் மிதப்பதாக தெரிந்து போய் பார்த்தேன். தீயணைப்பு துறையினர் வந்து நீரை இறைத்து இறந்துபோனவரின் பிரேதத்தின் 6 துண்டுகளை எடுத்தார்கள். அதன்பிறகு ஆஜர் எதிரியை கைது செய்து சிறைக்கு அனுப்பியதாக கேள்விப்பட்டேன். வழக்கு சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை. Sd/- S.Sumathy,

Principal Sessions Judge, Salem.